**R5348**

## WHAT COURSE SHOULD WE TAKE?

# எந்த மார்க்கத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

அக்டோபர் 1914இன் நடைமுறை சம்பந்தமான மற்றும் இந்த வாழ்க்கையின் நம்பிக்கை குறித்தும் கேட்டு இரு கடிதங்களை நாங்கள் பெற்றிருக்கிறோம். எங்களுக்கு எழுதாதவர்கள் கூட இதே கருத்தை கொண்டிருப்பார்கள் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. ஆகையால் உங்கள் அனைவருக்கும் எங்களுடைய பதிலின் சுருக்கத்தை நாங்கள் கொடுக்கிறோம்.

கடிதம் எழுதிய சகோதரன், தான் ஒரு விவசாயி என்று கூறியிருக்கிறார். 1914 அக்டோபருக்கு முன் சபை கூட்டிச் சேர்க்கப்படுவதும் மகா ஆபத்தின் காலம் ஆரம்பிப்பதும் நிச்சயமானால், தனது விவசாய வேலையை விட்டு விட்டு, இந்த வருடத்தை சத்திய புத்தகம் விநியோகிக்கிற வேலையை செய்ய விரும்புவதாகவும் தனது வயலை அடமானம் வைத்தாலோ அல்லது விற்றாலோ போதுமான பணம் கிடைக்கும் என்று கூறியிருக்கிறார்.

நமது பதிலில் அந்த சகோதரனுக்கு கூறிய யோசனையாவது: அவரது ஆதரவை நம்பி ஒரு மனைவியோஅல்லது குடும்பமோ இருந்தால், இது ஒரு ஞானமான செயலே அல்ல என்று கூறுகிறோம். அவரைச் சார்ந்து யாரும் இல்லை என்றால் இது ஒரு நல்ல காரியம் என்று நினைக்கிறோம். வெறும் ஒரு வருடத்தை மட்டும் கர்த்தருடைய வேலைக்கென்று கொடுக்கிறவர் வருடம் முடியும் போது நல்ல உடல் நலத்துடன் தனது வாழ்க்கைக்காக சம்பாதிக்க தகுதியுள்ளவராக இருப்பார் என்று நம்பலாம்.

சத்திய புத்தகம் விநியோக வேலையில் கழித்த ஒரு வருடம் மற்றவர்களுக்கான ஊழியத்தில் விடாமுயற்சி மற்றும் சுய தியாகம் ஆகியவற்றில் நல்ல படிப்பும் பரிசுத்த காரியங்களை கையாளுவதில் நல்ல சிந்தனையும் கிடைத்திருக்கும் என்று நாம் நம்புகிறோம். புத்தகம் விநியோக வேலையின் திறனிலும் மற்றும் மனோபாவத்திலும் சலுகை இருக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். இன்னும் சிலர் அந்த வேலைக்கு தேவையான திறமையில்லாதவர்களாகவும் இன்னும் சிலர் குறைவான திறமையுடன் மற்றவர்களுக்கு சேவைச் செய்வதில் அதிகம் விருப்பம் இல்லாமல் செய்வார்கள். நாம் எதைச் செய்ய முயற்சி செய்தாலும் கர்த்தர் மெச்சும்படி, நல்ல பலன் கொடுக்கும்படி நமது சரீர பிரகாரமான மற்றும் மனம் சார்ந்த பலத்தையும் நேரத்தையும் செலவுசெய்து நமது முழு ஞானத்தையும் பயன்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களில் வழி நடத்த பரத்திலிருந்து ஞானத்தை ஒவ்வொருவரும் நாட வேண்டும்.

அடுத்தக்கடிதம் அக்டோபர் 1914இல் சபை கூட்டிச்சேர்க்கப்பட வேண்டும் அல்லது மகா ஆபத்தின் காலம் ஆரம்பிக்க வேண்டும் என்பதை கண்டித்து, காலக்கணக்கை எதிர்க்கிற ஒரு சகோதரனை எப்படி நடத்துவது என்பதைக் குறித்த கரியம். நமது பதில் மற்ற காரியங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. இப்படி எதிர்க்கிறவர்களை நாம் விசேஷித்த விதமாக உற்சாகப்படுத்தக்கூடாது. ஏனெனில் ஒரு கெட்ட ஆவி எப்பொழுதுமே ஆட்சேபிக்கத்தக்கது. தீமை விளைவிக்கக் கூடியது. எனினும் நல்ல ஆவி ஒருவரது கருத்து வேறுபாட்டையும் அவர்களது கருத்து எதுவாக இருந்தாலும் நாம் அதை கண்டிக்கக்கூடாது. அவரிடத்தில் நாம் தீமையாக உணரக்கூடாது. அனைவரது தனிப்பட்ட உரிமையை நாம் அங்கீகரிக்க வேண்டும். பொன்னான கற்பனைக்கேற்ப ஒவ்வொருவரையும் நடந்த வேண்டும். நமது கருத்தை பிடிவாதமாக வெளிப்படுத்த நினைக்கக்கூடாது. மற்றவர்களும் தங்களது கருத்தை வெளிப்படுத்த உரிமை உண்டு என்பதை நினைக்க வேண்டும்.

### காலங்களின் அடையாளங்கள்

நமது நிலைமையும் நம்பிக்கையும் உண்மையாக இருந்தாலும், அது நமது அறிவினால் அல்ல, விசுவாசத்தினால் இருக்கிறது. சிலருக்கு விசுவாசம் என்ற காரியம் அறிவைப் போல மிகவும் பலமுள்ளதாகவும் உறுதியானதாகவும் இருக்கும். 1914 அக்டோபர் 1இல் ஏழத்தனையான புறஜாதியார் காலம் முடிவடைகிறது என்பதை கணக்கிடுவதில் நாம் தவறு செய்ததாக காணப்படவில்லை என்றாலும், காலக்கணக்கை பொருத்த மட்டில் நாம் தவறு செய்திருப்பதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோம்.

வேறு ஒரு தேதியைக் குறித்து மற்றவர்கள் சரிசமமாக நம்பினால், நமக்கு அது ஏற்படையதாக இல்லாமல் இருந்தாலும், அதனிமித்தம் அவர்களை நாம் கிறிஸ்துவின் சரீர அங்கங்களிலிருந்து நிராகரிக்கக் கூடாது. உங்களுடைய தேதியோ அல்லது எங்களது தேதியே எது சரியாக இருந்தாலும், நாம் காண்கிற அடையாளங்கள் ஆண்டவர் அருகில், வாசலில் இருக்கிறார் என்பதையும் அவரது ராஜ்யமானது கட்டுப்பாட்டை சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளும் என்பதையும் நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது ஒரு வருடத்திற்குள்ளேயோ அல்லது பத்து அல்லது இருபது வருடங்களுக்குள்ளேயே நாம் எதிர்ப்பார்க்கிற காரியம் நிறைவேறும். மகா ஆபத்தின் காலத்தினால் முன்னுரைக்கப்பட்டப்படி சபையானது கூட்டிச் சேர்க்கப்படும். நீதியான மேசியாவின் ஆளுகை ஆரம்பிக்கும்.

இந்த உண்மைகளைக்குறித்த வருடம் மற்றும் தேதியை காட்டிலும் பொதுவான உண்மைகள் தான் அதிக மதிப்பும் முக்கியத்துவமும் வாய்ந்ததாக இருக்கின்றன. சகோதர சிநேகம் நிலைத்திருக்கடவது! ஒரு நாள் அல்லது ஒரு வருடத்தை

பற்றிய வாக்குவாதம் விலையேறப்பெற்ற அன்பின் பிணைப்பை, உண்மையான அவருடையவர்களுக்கும் கர்த்தருக்கும் இடையேயான அன்பின் ஐக்கியத்தை உடைக்க அனுமதிக்க வேண்டாம். திட்டமான அறிவு இல்லாத இந்த காரியத்தைக் குறித்த விவாதத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ''பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக,'' தெய்வீக திட்டம், இரட்சகர் அவரது மரணத்தின் பலன் முதலானவைகளின் மீதான விசுவாசத்திற்கான சில சமயம் முறிவு அவசியமாக இருக்கிறது. இந்த காரியங்களெல்லாம் தெளிவாக வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன. காலக்கணக்கை போன்றும் காலக்கணக்கை அடிப்படையாகக் கொண்ட காரியங்களைப் போன்றும் இந்த காரியங்கள் அனுமானத்தில் விடப்படவில்லை.

## தீர்க்கதரிசனத்தின் ஒரு தெளிவான காட்சி

ஆசிரியருக்கு அதிகமதிகமாக தெளிவாகும் சத்திய அம்சங்களை காவற்கோபுர வாசகர்களுக்கு இந்த தெளிவான காட்சி அவர்களுக்கு பிரயோஜனமாயிருக்கும்படி அவ்வப்போது கொடுப்பார் என்று உறுதி கூறுகிறார். வேறு வார்த்தையில் சொல்லுவோமானால் எதையும் மறைத்து வைக்கமாட்டார்.

மகா பாபிலோன், தேசங்கள் தங்களது நியாயத்தீர்ப்பை பெறுவதற்கு முன்னரே தனது நியாயத்தீர்ப்பை பெறும் என்று கடந்த முப்பத்து மூன்று வருடங்களாக (இந்தகட்டுரை 1913ல் எழுதப்பட்டது) காவற்கோபுரத்தில் நாங்கள் கொடுத்திருக்கிறோம். ''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும்'' என்கிற அறிக்கை அர்ப்பணம் செய்த சபைக்கு விசேஷமாக பொருந்துவதாக இருந்தாலும், பேர் சபைகளுக்கும் அதில் சம்பந்தம் இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். எந்திரக்கல்லை சமுத்திரத்தில் எறிந்ததை போல பாபிலோனின் விழுகைக்கு பிறகு மகா ஆபத்து தேசங்களின் மேல் வெளியரங்கமாக வரும்.

எனினும், நாம் அனைவரும் மிகவும் குறிப்பாக உலகத்தின் மகா ஆபத்தின் காலத்தைக்குறித்து சிந்திக்க விருப்பமுள்ளவர்களாக இருக்கிறோம். அதை புற ஜாதியாரின காலங்கள் அல்லது வருடங்களின் முடிவாக அல்லது 1914 அக்டோபரில் அல்லது தினமும் அதற்காக கவனித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு வேளை உலக ஆபத்து வருவதற்கு முன் மகாபாபிலோன் வெளியரங்கமாக கையாளப்படும் என்ற உண்மையை ஓரளவுக்கு நாம் புறக்கணித்திருக்கிறோம். உலகத்தின் மகா ஆபத்து அக்டோபர் 1,1914 அல்லது அதற்கு முன் ஆரம்பிப்பது பற்றிய எண்ணம் கடந்த இரண்டு வாரங்களாக மிகவும் பலமாக ஆசிரியரின் சிந்தையில் வந்திருக்கிறது. இடைப்பட்ட மாதங்களில் அதிர்ச்சியூட்டும் காரியங்களை எதிர்பார்க்கலாம்.

மகா கோபத்தின் நாள் வானங்களாகிய பேர் கிறிஸ்தவ சபையில் ஆரம்பிக்கும் என்று பரிசுத்த பேதுரு விளக்குகிறார். ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மட மட என்று அகன்று போகும். பூதங்கள் வெந்து உருகிப்போகும். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.'' (2 பேதுரு 3:10) இங்கே பூமி என்பது தற்கால சமூக ஒழுங்கையும், வானங்கள் என்பது மத அமைப்பின் ஒழுங்குகளையும் குறிப்பதாக புரிந்துகொண்டு, மத அமைப்பாகிய வானங்கள் பெரும் சப்தத்துடன் மகா குழப்பத்தில், அமைதியின்மையில் அகன்று போகும் என்றும் அந்த நாளின் உக்கிரகத்தின் வெப்பத்தினாலும் போரினாலும் பூதங்கள் வெந்து உருகிப்போகும் என்றும் காண்கிறோம். பிறகு பூமி அல்லது சமூக ஒழுங்கு அந்த நாளின் சிக்கல்களில் சீர் குலையும், அராஜகத்தினால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போகும். பிறகு நாம் இன்னும் ஒரு வருடத்திற்குள் ஆபத்து ஜனங்களை பொதுவாக சென்றடையும். அதற்கு முன்னதாக தற்கால மத ஸ்தாபனங்கள் தகர்ந்து போகும் என்று தோன்றுகிறது. அவைகள் தகர்ந்து போகுமா?

## மிருகத்தின் சொரூபம்

வெளிப்படுத்தல் 13ஆம் அதிகாரத்தை காவற்கோபுரத்தில் 1880இல் விளக்கமளித்திருக்கிறோம். மிருகம் என்பது அடையாள பாஷையில் ஒரு அரசாங்கத்தை குறிக்கிறது. பத்து கொம்புகளுள்ள மிருகம் போப்பு அரசாங்கத்தை குறிக்கிறது. அது கொஞ்ச காலம் ஐரோப்பா முழுவதையும் ஆளுகை செய்து, பிறகு ரோமாபுரி அரசாங்கத்தை ஆளுகை செய்தது. அப்படிப்பட்ட அரசியல் அதிகாரம் இப்பொழுது இல்லையென்றாலும், மேசியாவின் பிரதிநிதியாக சகல தேசங்களையும் ஆளுகின்ற உரிமையும் அதிகாரமும் இருப்பதாக கூறிக்கொள்ளுகிறது.

இரண்டு கொம்புகளுள்ள மிருகம் சபை நாடுகளாகிய கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லேண்டை குறிப்பதாக குறிப்பிட்டோம். ஏனெனில் அதுவும் கூட கிறிஸ்தவத்தையும் அரசியலையும் இணைக்கிற அரசாங்கமாக இருக்கிறது. பிஷப்புகள் பார்லிமென்டில் உட்காருகிறார்கள். ராஜா அதிகாரப்படி இங்கிலாந்து சபையின் தலைவராக இருக்கிறார். இது தீங்கிழைக்காத மத ஸ்தாபனம் என்ற அடையாள பாஷையில் நமக்கு சொல்லுகிறது. ''ஒரு ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளை உடையாதாயிருந்தது.'' தீமை செய்வது அதன் நோக்கமல்ல. ஆனால் அது வலுசர்ப்பத்தைப் போல பேசினது. வலுசர்ப்பம் முற்றிலுமாக அரசியல் அதிகாரத்தை, கிரேட் பிரிட்டனின் அரசாங்கத்தைக் குறிக்கிறது. பெயரளவில் மத சம்பந்தமானதாக இருந்தாலும் அது வலுசர்ப்பத்தைப் போல பேசினதால் முற்றிலுமாக அரசியல் அரசாங்கத்தைக் குறிக்கிறது.

''மிருகத்தின் (போப்) சொரூபம்'' கிபி 1846 இல் அமைக்கப்பட்டது என்ற உண்மையை கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அந்த வருடத்தில் புரட்டஸ்டான்ட் சபைகள், குறிப்பாக அமெரிக்காவில் ''இவாஞ்சலிக்கல் அலையன்ஸ்'' என்ற

அமைப்பை உருவாக்கினார்கள். இந்த கூட்டணி வெளிப்படையாக சமாதானம், நல்லிணக்கம் மற்றும் ஒத்துழைப்புக்காக ஆகும். ஆனால் உண்மையிலேயே இந்த அமைப்பின் நோக்கம் அனைத்துபல்வேறு புரட்டஸ்டன்ட் பிரிவுகளுக்கும் கௌரவத்தையும் அதிகாரத்தையும் கொடுக்கவும், முடிந்த வரை இவர்களை ஒதுக்கி புதிய பிரிவு உண்டாவதை தடுக்கவும் ஆகும்.

ஒரு மரபு வழி தரநிலையை ஏற்படுத்த முயற்சித்தலும், ஒருவருக்கொருவர் ஒத்துழைப்புக் கொடுத்தாலும், பேப்டிஸ்ட், மெதடிஸ்ட், லுத்தரன், பிரஸ்பட்டேரியன் முதலான பல்வேறு மதப்பிரிவுகளுக்கு ஆதரவு தருவதுமே இந்த கூட்டணியின் நோக்கம். போப்பு மிருகத்தின் சொரூபத்தை போல அல்லது அரசாங்கத்தைப் போல ஒரு அதிகாரத்தை அல்லது வல்லமையை உண்டாக்க முயற்சித்தனர்; போப்பு சபை தங்களை மட்டுமே சபை என்பதும் மற்றவர்கள் எல்லாம் மதவெறி கொண்டவர்கள் என்பதும் அவர்களது வாதமாக இருந்தது என்று கண்டனர். ஆகையால் இவாஞ்சலிகல் அலையன்ஸ் அமைப்பை ஏற்படுத்தியவர்கள் தங்களது அமைப்பில் இருக்கும் அனைவரும், "மரபு வழி சபைகள் என்றும் மற்ற அனைத்துசபைகளும் மதவெறி கொண்டவைகள்" என்றும் கூற மேற்கொண்டார்கள். இந்த உணர்வில் அது ஒரு நகலாக அல்லது போப்பின் அமைப்புகளின் சொரூபமாக இருந்தது. அது அறுபது வருடமாக வல்லமை அல்லது ஜீவன் இல்லாத சொரூபமாக இருந்தது.

எனினும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிற (வெளிப்படுத்தல் 13ஆம் அதிகாரம்) தீர்க்கதரிசனத்தில் கர்த்தர் கூறுகிறதாவது: இந்த யுக முடிவில் சொரூபம் சக்தியை, வல்லமையை, உயிரை, ஜீவனை பெறும். இனிமேல் அது சுறுசுறுப்பாக ஆகும். ஆனால் அது மிருகத்துக்கு விரோதமானது அல்ல. ஆனால் அனைவரும் மிருகத்தையோ அல்லது சொரூபத்தையோ வணங்க வேண்டும் என்ற காரணத்தினால் அனுதாபம் உடையதாக இருக்கிறது. எல்லாரும் மிருகத்துடனோ அல்லது சொரூபத்துடனோ நல்லிணக்கத்துடன் இருக்க வேண்டும். அதாவது கத்தோலிக்க சபையுடனோ அல்லது இவாஞ்சலிக்கல் அலையன்ஸில் முதன்மையான அமைப்புடனோ நல்லிணக்கத்துடன் இருக்க வேண்டும். சொரூபம் ஜீவனை பெற்ற உடனே அதன் பலன் புரட்டஸ்டன்ட் சபை கூட்டமைப்பாக இருக்கும்.

### கூட்டமைப்பை நோக்கி ஒரு முக்கியமான படி

சொரூபத்தின் உயிர்ச்சக்தி இரண்டு கொம்புள்ள மிருகத்திடமிருந்து வரவேண்டியிருக்கிறது. அதாவது இங்கிலாந்து சபை. இது முழுமையடைய முப்பது ஆண்டுகளுக்கு மேலாக காத்துக்கொண்டிருக்கிறோம். அது நெருங்கி நெருங்கி வருகிறது. சில வருடங்களுக்கு முன்னதாக எபிகோபல் சபை,சபை கூட்டமைக்கு உயிர்ச்சக்தியை கொடுப்பதற்கான ஒரு நடவடிக்கை எடுத்தது. அது அதற்கு ஆதரவாகவும் சாதகமாகவும் இருக்கிறது. அதனுடைய முக்கியமான நடவடிக்கை இவாஞ்சலிகல் அலையன்ஸை பிரதிநிதித்துவப்படுத்துகிற ஊழியர்களை அங்கீகரித்ததாகும். இதற்கு முன்னதாக கத்தோலிக்க அல்லது எபிகோபல் சபையின் பிஷப்புகள் கைகளை வைத்து நியமனம் செய்த ஊழியர்கள் பிரசங்கம் பண்ண அனுமதிக்கப்படவில்லை.

சொரூபத்தில் இந்த அங்கீகாரம் தான், சொரூபத்திற்கு தேவையான சகல உயிர்சக்தியாக இருக்கிறது. நாம் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறோம். அநேக வருடங்களாக இவாஞ்சலின் அலையன்சில் உள்ள பல்வேறு சபைகளின் ஊழியர்களுக்கு மறு நியமனம் செய்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள் அதை மறு நியமனம் செய்கிறார்கள். முடிவாக எபிகோபல் பிஷப்பின் கைகளின் மூலமாக மறு நியமனம் செய்வதை ஊழியர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் நிச்சயமாக கூற முடியாது. தேவையை சந்திக்க வேறொரு வழி கண்டு பிடிக்கப்படும். அதன்மூலம் எபிகோபல் சபை ஊழியர்களை மறு நியமனம் செய்வதை கட்டாயமாக்காமல் சபை கூட்டமைப்பை அங்கீகாரம் பண்ணுவது சாத்தியமாக இருக்கிறது.

வெளிப்படுத்தல் 13ஆம் அதிகாரத்தை நாம் புரிந்து கொண்டபடி, சொரூபமானது உயிர் சக்தி பெற்றவுடன் மிகவும் சீக்கிரத்தில் அதன் செல்வாக்கை, கௌரவத்தை, வல்லமையை ஒவ்வொரு வழியிலும் பயன்படுத்தி, "வானத்திலிருந்து அக்கினியை பூமியின் மேல் இறங்கப் பண்ணும்." (வெளிப்படுத்தல் 13:13) அதாவது ஏதாவது ஒரு வகையில் தங்களுக்கு எதிரிகள் என்று கருதப்படுகிறவர்களை கர்த்தரின் பெயரால் தண்டிப்பது ஆகும். சீக்கிரத்தில் ஆவிக்குரிய வியாபார ஸ்தலத்தில் மிருகத்தின் அல்லது சொரூபத்தின் முத்திரையையோ அல்லது இலக்கத்தையோ ஒத்துழைப்பு என்கிற வலது கையிலோ அல்லது பொது பாவ அறிக்கை என்கிற நெற்றியில் பெற்றவர்கள் தவிர வேறு யாரும் வாங்கவோ அல்லது விற்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இதன் பொருள் என்னவென்றால் கூட்டமைப்பில் இணையான அகில உலக வேத மாணவ ஐக்கிய சபையும் மற்றவர்களும் முற்றிலுமாக கட்டாயப்படுத்தப்படுவார்கள். சத்தியமானது தெருக்களிலே விழும். புதிய ஒழுங்குமுறையினால் நீதியானது நுழைய முடியாமற்போகும். அது கொஞ்ச காலத்திற்கு கிறிஸ்தவத்திற்கு பெரும் வெற்றி என்பது போல தோன்றும். இவைகள் போப்பு சபை, புரட்டஸ்டன்ட் கூட்டமைப்பு சமமாக பகிரப்படும். இதை ஒன்றாக சுற்றப்படுவதை, ஒருவரையொருவர்

நெருங்குவதை, ஒருவருக்கொருவர் அனுதாப்படுவதை, பரஸ்பர பாதுகாப்பிற்காக ஒன்றாக சுற்றப்படுவதை நாம் முன்னரே பார்க்கிறோம்.

ஆனால் இந்த புதிய ஒழுங்கு முறையின் வெற்றி குறுகிய காலம் மட்டுமே இருக்கும். திரளான ஜனங்கள் இருண்ட யுகத்தில் இருந்ததைப் போல இனி அறியாமையில் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள். உண்மையான நிலைமையை புரிந்து கொள்ள விழித்துக்கொண்டு, நியாயத்தீர்ப்பு முன்னுரைக்கப்பட்டபடி, கர்த்தரால் முன்னரே நிராகரிக்கப்பட்ட மகா பாபிலோன் மேல் தண்டனையை நிறைவேற்றுவார்கள். அவள் திரும்பி எழும்பாதபடி ஒரு எந்திரக்கல்லை போல கடலிலே எறியப்படுவது போல தள்ளுண்டு போவாள். கடல் என்பது மகா திரளான ஜனங்களைக் குறிக்கிறது. குறிப்பாக அமைதியற்ற எதிர்ப்பு வகுப்பாரை குறிக்கிறது. இரண்டு கொம்புள்ள மிருகம் கூட்டமைப்பில் சொரூபத்தை அங்கமாக்கியதன் மூலம் ஜீவனைக் கொடுத்தபிறகு அது தனது ஆளுகையை வெளியரங்கமாக இழக்கிறது.

## தற்கால கண்ணோட்டம்

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது: இவைகளனைத்தும் ஒரு வருடத்திற்குள் நடக்குமா? நாங்கள் ஆம், என்று பதில் கூறுகிறோம். அது சாத்தியமாகும். இரண்டாவது கேள்வி: அது அநேகமாக நிகழுமா? அது ஒரு வேளை நிகழுமா? அதற்கான பதில் இல்லை என்பதே. இவ்வளவு காரியங்கள் ஒரு வருடத்தில் நடப்பது அரிதான காரியமாக தோன்றுகிறது. இந்த காரியத்தைக் குறித்த தமது சொந்த தீர்மானத்தை ஒவ்வொருவரும் அப்பியாசப்படுத்த வேண்டும். கூட்டமைப்பின் அங்கங்களை அமைக்கிறவர்களிடையே அநேக பகுதியிலும் அதிகமான கோபம், வன்மம், பகைகள், சண்டைகள் அபிவிருத்தி அடைந்து வருகிறதை நாம் பார்க்கிறோம். இந்த அவதூறான எதிர்ப்புகள் வழக்கமாக இந்த சபை பிரிவுகளின் ஊழியர்களிடமிருந்து வருகிறது.

பச்சை மரத்துக்கு இவைகளை செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்யமாட்டார்கள்? (லூக்கா 23:31) இவாஞ்சலிகல் அலையன்ஸ் உயிர்ச்சக்தியை பெறுமுன்பே இப்படிப்பட்ட மத வெறியும், கசப்பான பொய்யாக்குதலும் அப்பியாசப்படுத்தப்பட்டு, பகைகள் வெளிப்படுத்தப்பட்டால், சொரூபமானது உயிர்ச்சக்தியை பெற்ற பிறகு அதே நபர்கள் எவ்வளவு திமிர் பிடித்தவர்களாக ஆவார்கள்? எவ்வளவு சீக்கிரத்தில் தொந்திரவு செய்யும் வெறுப்பின் ஆவி அபிவிருத்தி அடைகிறது?

நாம் இந்த காரியத்தை தெளிவுபடுத்துவோம். பல நூற்றாண்டுகளாக வழி வழியாக வந்த தப்பறையான கருத்து ரோம சபை மற்றும் இங்கிலாந்து சபையின் பிஷப்புகள், ''அப்போஸ்தல பிஷப்புகள்'' அல்லது அப்போஸ்தலரின் வாரிசுகள் என்பதாகும். இந்த கொள்கையின்படி இந்த ''அப்போஸ்தல பிஷப்புகள்'' தங்கள் கைகளை வைத்து அனுமதி தரவில்லை என்றால் இந்த பூமியில் யாருக்கும் போதிக்கவோ அல்லது அறிவிக்கவோ உரிமை இல்லை என்பதாகும்.

இந்த ஒழுங்கின்படி மெதடிஸ்ட், பேப்டிஸ்ட், லூத்தரன், பிரஸ்பட்டேரியன் இப்படிப்பட்டவர்கள் அதிகாரம் இல்லாமல் போதிக்கிறார்கள். நியமனத்தைப் பற்றி பேசும் போது, அவர்கள் தங்களது சொந்த ஊழியர்களை தங்கள் பிரிவில் ஏற்படுத்துவதை அர்த்தப்படுத்துகிறார்கள். கூட்டமைப்பு இந்த சங்கடத்தை நீக்கி, ஒவ்வொரு சபை பிரிவும் மற்றவர்களது நியமனத்தை அங்கீகரிக்க முயற்சி செய்கிறார்கள். கூட்டமைப்பு இந்த பொதுவான மரபு வழி மதக் கோட்பாட்டை இந்த அங்கீகாரத்தின் மூலமாக கட்டுகிறார்கள். ஏதாவது ஒரு முறையில் ஜீவனை, உயிர்ச்சத்தை, சக்தியை, கௌரவத்தை பெற்று இங்கிலாந்து சபை, தங்களது ஊழியர்களை ஏற்படுத்தி அதை அங்கீகாரம் செய்வார்கள்.

சுவிசேஷத்தை போதிக்கவும் கற்பிக்கவும் ஒரு சாலையை ஏற்படுத்துவார்கள் என்று உறுதிப்படுத்துகிறோம். அவர்களது அங்கீகாரமும் நியமனமும் இல்லாமல் போதிக்க ஒரு குறுகலான வழியை அனைவருக்காகவும் ஏற்படுத்துவார்கள். மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்கவும் மிருகத்தின் முத்திரையை நெற்றியிலோ அல்லது கையிலோ பெறவும், மறுக்கிற அனைவருக்கும் நமக்கும் இது சோதனை காலமாக இருக்கும். (வெளிப்படுத்தல் 13:15-17)

## ஒருவருக்கொருவர் நமது அணுகுமுறை

நாங்கள் இப்பொழுது ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறோம்.இந்த காரியங்களையெல்லாம் ஒரு வருடத்திற்குள் நிறைவேற இயலாததாகவோ, கஷ்டமானதாகவோ இருந்தால், இந்த காரியங்கள் எல்லாம் ஒரு வருடத்திற்குள் நடக்காது என்று உறுதியாக உணருகிற மற்றும் காலக்கணக்கில் குறை இருக்கிறது என்று நினைக்கிற சகோதரர்களிடத்தில் நாம் கனிவாகவும் பொறுமையுடன் நடந்து கொள்ளவும் உணரவும் வேண்டும். ''சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது.'' ''தீமையை வெறுத்து, நன்மையை பற்றிக்கொள்ளுங்கள்.'' இந்த சில அனுபவங்கள், அடுத்த சில மாதங்களில் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவதில் ஏமாற்றம் இருந்தாலும், நமது அனைத்து அனுபவங்களும் நன்மைக்கு ஏதுவாக இருக்கும்படி தேவனுடைய கிருபை நம்மை வழிநடத்த, நம்மை ஆசீர்வதிக்க நம்மோடு கூட இப்படியாக இருக்கும்.

எபிகோபல் சபையானது, அவர்களது அங்கங்களில் ஒருவர் தலைமை பிஷப் ஆக இருக்க, இங்கிலாந்து சபையின் ஆர்ச் பிஷப் அலுவலகத்தில் இருப்பது போல, சபை சட்டத்தில் ஒரு தீர்மானத்தை சபை மாநாட்டில் நிறைவேற்றியிருக்கிறார்கள். தெளிவான விவாதத்திற்கு பிறகு தங்கள் ''பணி மன்றம்'' (Mission Board) மற்ற கிறிஸ்தவ பணி மன்றங்களுடன் ஒத்துழைப்புக் கொடுக்க அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். சில பிஷப்புகள் தங்களது ''குருத்துவ உறுதி மொழியை'' மீறுவதாக இருக்கும்

என்று எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால் அது மறுக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது, முன்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைளுடன் மற்ற புரட்டஸ்டன்ட் சபைகளுடன் இந்த ஒத்துழைப்பு இணைந்து, எபிகோபல் சபையின் அழைப்புடன் புரட்டஸ்டன்ட் சபை ஊழியர்கள் பங்குபெற அனுமதிக்கப்படுகிறார்கள். இது சபை கூட்டமைப்பு அல்லது இவாஞ்சலிக்கல் அலையன்ஸின் அங்கீகரமாகும். இன்னும் எவ்வளவு அதிகமான உயிர்ச்சத்து சொரூபத்திற்குதேவைப்படும் என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

''புறஜாதியார் காலம்'' முடிவடைவதற்கோ அல்லது வேறு எந்த குறிப்பிட்ட காரியம் நடைபெறவோ 1914 அக்டோபர் நிச்சயமான தேதி என்று அக்டோபர் 15ஆம் தேதியின் இதழில் நாங்கள் கூறவேயில்லை. இதைப்பற்றி ஒரு வாசகர் தனது கேள்வியில் கூறியிருந்தார். வேதாகம பாடங்கள் தொகுப்பில் தொகுதி எண் 2இல் கொடுக்கப்பட்டுள்ளதை கீழே தருகிறோம். ''புறஜாதியார் காலமானது 2520 வருடங்கள் கொண்டது என்றும் அது கிபி 1914ஆம் வருடம் முடிவடைகிறது என்பதையும் நிரூபிப்பதற்கு முன்பு, அது கிமு 606இல் ஆரம்பித்தது என்று நாம் முதலில் கண்டு பிடித்ததை இப்போது நினைவில் வைக்க வேண்டும்...... புறஜாதியாரின் காலத்தைப் பற்றிய இந்த வேதாகம ஆதாரங்கள் எல்லாம் ஒரு நிர்ணயிக்கப்பட்ட சத்தியமாக நாம் கருதுகிறோம். இவ்வுலக ராஜ்யத்தின் முடிவம் தேவனின் ராஜ்யம் பூரணமாக இவ்வுலகத்தில் ஏற்படுதலும் சமீப காலத்தில் கிபி 1914 இன் முடிவிலே ஏற்படும்.''

1914ஐப் பற்றி நாங்கள் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளில், இந்த மேற்கோள்களில் தவறானது எதுவும் இல்லை என்று நாங்கள் நினைக்கிறோம். இந்த அறிக்கைகளிலும் இன்னும் நமது மற்ற அறிக்கைகளிலும் நமது வாசகர்களுக்கு நமது கருத்தையும் வேதவாக்கியங்களைக் குறித்த நமது விவாதத்தையும் அறிவித்துள்ளோம். அதை அவர்களது கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். இதனால் வாசகர்களை சிந்தித்து அவர்களே தீர்மானிக்கவும், அதை ஏற்றுக்கொள்ளுவதும் அதை மறுப்பதும் உண்மைகளைப் பற்றிய அவர்களது தீர்மானத்தின்படி இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள்களில், எந்த அதிகாரப் பூர்வமான அறிக்கையையும் கொடுக்கவில்லை என்பதை கவனிக்கவும். வாசகர் தனது சொந்த அறிவை பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறார். உதாரணத்திற்கு வார்த்தைகளைக் கவனிக்கவும்: ''மனதில் வைக்கவும்;'' ''ஆதாரங்களை ஆராய முற்படும் போது;'' ''வேத ஆதாரம்.'' ஆசிரியர் வாசகர்களுக்கு முன் வைத்த ஆதாரங்களைக் கொண்டே அவர் சத்தியத்தை நிலை நாட்டுவதாக தனது கடைசி வாக்கியத்தில் எல்லாவற்றையும் சேர்த்து கூறுகிறார்.

இதைப் பொருத்தவரை காவற்கோபுரம் முன்னிலைப் படுத்துகிறவைகள் மற்றவைகளைக் காட்டிலும் மாறானவை என்று இது குறித்து நாங்கள் நம்புகிறோம். ஆசிரியரின் கருத்தையும் அதற்கான காரணங்களையும் நாங்கள் நேர்மறையாக கூறுகிறோம். ஆனால் மேலும் எதையும் முயற்சிக்காமல் எல்லா காரியத்தைக் குறித்தும் முடிவான தீர்மானத்தை ஒவ்வொரு தலை மற்றும் இருதயத்திற்கு விட்டு விடுகிறோம்.